Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

01.05.2020 வெள்ளிக்கிழமை

## உயிரிழப்பு 235,000!

வுகான், மே 1

கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 35 ஆயிரமாக அதிகரித்தது. கொரோனாவால் உலக அளவில் உயிரிழப்புக்கள் சடுதியாக அதிகரித்து

2



## விளையாட்டு நாடாளுமன்றில் பங்கேற்க போவதில்லை

நிராகரித்தது ஜே.வி.பி.

கொழும்பு, மே1

அலரி மாளிகையில் மே 4ஆம் திகதி விளையாட்டு நாடாளுமன்றமே கூட்டப்படுகின்றது. சட்டபூர்வமற்ற அத்தகைய விளையாட்டு நாடாளுமன்றத்தில் தமது கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள். இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

2



## கொரோனா 668

**இன்று மூவர் அடையாளம்**

**157 பேர் குணமடைவு**

**504 பேர் சிகிச்சையில்**

கொழும்பு, மே 1

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 3 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதையடுத்து தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 665 இலிருந்து 668 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதேவேளை, தொற்றுக்குள்ளான மேலும் 03 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 154 இலிருந்து 157 ஆக உயர்ந்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 668 பேரில் தற்போது 504 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# மஹிந்தவின் கூட்டம்: கூட்டமைப்பு குழப்பம்

யாழ்ப்பாணம், மே 1

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பில் எதிர்வரும் திங்கட்கிழமை அலரிமாளிகையில் இடம்பெறும் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கவில்லை என்று இன்று மாலை தெரிவித்தது.

2

## மஹிந்தவின் அழைப்பை நிராகரித்தது சஜித் அணி!

விளக்கி அறிக்கையும் அனுப்பப்படும்

கொழும்பு, மே 1

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிக் கட்சிகளும் அடியோடு நிராகரித்துள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடை பெறவுள்ள கூட்டத்தில்

2





## வடமராட்சி கிழக்கில் பொலிஸ், அதிரடிப்படை காட்டுமிராண்டித்தனம்!

மூவர் படுகாயம்

வடமராட்சி, மே 1

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மாளிகைத்திடல் அம்மன் கோயிலடிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் துப்பாக்கிகள் மற்றும் கொட்டன்களுடன் நேற்றுக் காலை புகுந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அந்த வீட்டிலிருந்தவர்கள் மீதும், அயல் வீட்டார் மீதும் நடத்திய தாக்குதலில் 3 பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்

2

## முல்லை. தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர் சாவு

கொரோனா காரணமா?

முல்லைத்தீவு, மே.1

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு கேப்பாப்பிலவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த முதியவர்

2

## மே 7ஆம் திகதிக்கு பின்னர் நாடு வழமைக்கு திரும்பும்!

சுகாதார நடைமுறை திட்டத்தை தயாரித்துள்ளது சுகாதார அமைச்சு

கொழும்பு, மே 1

நாட்டில் தற்போது பின்பற்றப்படும் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மே 7 ஆம் திகதிவரை தொடரும் என்றும், அதன் பின்னரே கட்டம், கட்டமாக இலகுபடுத்தப்படும் என்றும்

2

## இராணுவ வாகனங்கள் மாத்திரம் போதாது

இ.போ.ச. பேருந்துகளை பயன்படுத்தியமைக்கு காரணம் சொல்கிறார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், மே 1

விடுமுறையில் சென்ற முப்படையினரை அழைத்து வருவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளைப் பயன்படுத்தியது உண்மைதான். நாம்

2

## நீர்வேலியில் நள்ளிரவு 3 வீடுகளில் கைவரிசை

நகைகள், பொருள்களுடன் தப்பிச் சென்றனர் கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், மே 1

நீர்வேலிப் பகுதியில் நள்ளிரவுவேளை வீடுகளுக்குள் முகமூடிகளுடன் சென்ற கும்பல் ஒன்று வீட்டிலிருந்தோரைத் தாக்கி நகைகள், பொருள்களைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று

6

## காரைநகர் கொண்டுவரப்பட்ட வெலிசறைக் கடற்படையினர்!

யாழ்ப்பாணம், மே 1

இலங்கையில் அதிகளவு கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்ட வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் மற்றும் அவர்களது உறவினர்கள் 80 பேர், காரைநகர் கடற்படைமுகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

6

# உயிரிழப்பு....

வருகின்றன. நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 6 ஆயிரம் உயிரிழப்புக்கள் உலக அளவில் பதிவுசெய்யப்பட்டன. இந்த நிலையில் இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி ஒட்டுமொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 35 ஆயிரமாக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 32 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

# மஹிந்தவின் அழைப்பை நிராகரித்தது சஜித் அணி!

ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிகளான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் பங்கேற்காமைக்கான காரணங்களை விளக்கி ஐக்கிய மக்கள் சக்தி அறிக்கை வெளியிடும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு, கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு எதிர்க்கட்சிகளின் சார்பில் முன்வைக்கப்பட்ட யோசனையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தூக்கியெறிந்துவிட்டு தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்ற இந்த வேளையில் அவரின் சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் நாம் கலந்துகொள்வது எப்படி? சபாநாயகரின் அழைப்புக்கிணங்க கூட்டம் நடந்தால் அதில் நாம் பங்கேற்பதில் நியாயம் இருக்கின்றது. எக்காரணம் கொண்டும் பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் நாம் பங்கேற்கமாட்டோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ஓ,5,22)

# முல்லை. தனிமைப்படுத்தல்

ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார். வேலு சின்னத்தம்பி (வயது80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் வீடில்லாமல் இருந்தவர்கள் பலர் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு விமானப் படை முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில் இன்று நெஞ்சுவலி எனத் தெரிவித்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை நோயாளர் காவு வண்டி மூலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, அவர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

அவரது உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,5,19)

# மஹிந்தவின் கூட்டம்:

"திங்களன்று நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளைப் பிரதமரிடம் நாம் எடுத்துரைப்போம்" என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று மாலை தெரிவித்திருந்திருந்தார். இந்த நிலையிலேயே இன்றைய தினம் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்று கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் பழைய நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தன. அது தொடர்பில் அமைச்சரவையில் ஆராயப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் எதிர்வரும் திங்கட்கிழமை அலரிமாளிகைக்கு வருமாறு அழைத்திருந்தார். இந்த அழைப்பு கூட்டமைப்புக்கும் கிடைத்திருப்பதாகவும், அதில் கலந்து கொள்வோம் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

ஆனால் சஜித் பிரேமதாச தலைமையிலான எதிரணிக் கூட்டில் உள்ளவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்துள்ள நிலையில், இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்று முடிவு எடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இன்று மாலை தெரிவித்துள்ளார். (ஓ,5,22)

# மே 7ஆம் திகதிக்கு.....

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவக் கலாநிதி அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

'கொரோனா' வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டில் பின்பற்றப்படும் இறுக்கமான நடைமுறை எப்போது தளர்த்தப்படும் என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் பரவியிருக்காவிட்டால் இந்த நேரத்துக்கு ஊரடங்கு உத்தரவு இலகுபடுத்தப்பட்டிருக்கும். எனவே, வெசாக் பண்டிகை முடிவடையும் காலப்பகுதிவரை தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகளை நாட்டில் கட்டாயம் தொடர வேண்டும். அதன்பின்னர் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் கட்டம், கட்டமாக முன்னெடுக்கப்படும். இதற்காக சுகாதார அமைச்சால் விசேட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்துறைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என வழிகாட்டல்கள் அதில் இடம்பெற்றுள்ளன. மும்மொழிகளிலும் அவை வழங்கப்படும். இணையத்தளங்கள் ஊடாகவும் பெறமுடியும்.

வெவ்வேறான தொழில் துறைகள் இருக்கின்றன. எனவே, அங்கு எவ்வாறு சுத்தம், சமூக இடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றலாம் என கலந்துரையாடப்பட்டே திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

# விளையாட்டு நாடாளுமன்றில்....

வால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பு தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே அநுரகுமார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் இலங்கையில் பரவ ஆரம்பித்த நாளன்றே, இது தேசியப் பிரச்சினையாகும். அரசால் மட்டும் இதனை கையாள முடியாது. அனைத்து தரப்புகளையும் உள்ளடக்கிய வகையில் பொது வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. அறிவித்திருந்தது. அத்தகைய பொறி முறையில் பங்காளர்களாக இணைவதற்கு கட்சி உறுப்பினர்களும் தயாராகவே இருந்தனர். எனினும், பொதுவான வேலைத்திட்டத்தை உருவாக்காமல் அதிகார மோகத்தில் தன்னிச்சையான செயற்பாடுகளையே அரசு முன்னெடுத்தது. தற்போது பிரதமருக்கு கட்சிகளின் யோசனைகள் தேவைப்படுகின்றதெனில் அதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டலாம். அதில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்குவதற்கு நாம் தயார். ஆனால், 225 பேரையும் அலரிமாளிகைக்கு அழைத்து விளையாட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டுவதால் நடக்கப்போவது என்ன? அதன்மூலம் எவ்வித பிரதிபலனும் கிடைக்காது. நாட்டில் அரசமைப்பு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒன்று கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக்கூட்டி அதற்கு தீர்வு காணவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் உயர்நீதிமன்றத்தை நாடவேண்டும். இந்த நடைமுறைகளைப் பின்பற்றாமல் அலரிமாளிகையில் கூட்டம் நடத்துவதால் எதுவும் நடைபெற போவதில்லை. அத்தகைய விளையாட்டு நாடாளுமன்றத்தில் நாம் பங்கேற்கமாட்டோம். இது பற்றி பிரதமருக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஓ,5,44)

# பொலிஸ், அதிரடிப்படை

டுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த மேலும் பலர் அச்சம் காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லப் பின்னடித்துள்ளனர்.


மாளிகைத்திடல் அம்மன் கோயிலடிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் நுழைந்த பொலிஸார் அங்குள்ளவர்களிடம், "கள்ள மண் ஏற்றியுள்ளீர்கள். இங்கு இருக்கின்ற கன்ரைனர் வாகனத்தை எடுத்து செல்லப் போகின்றோம்" என்று தெரிவித்துள்ளனர். இதனையடுத்து தாம் மணல் ஏற்றவில்லை எனவும், வாகனத்தின் இயந்திரத்தில் சூடு இருக்கின்றதா எனப் பார்க்குமாறும் வீட்டிலிருந்த இளைஞர்கள் கூறியுள்ளனர். எனினும், விடாப்பிடியாகப் பொலிஸார் வாகனத்தைத் தாம் எடுத்துச் செல்லபோகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பொலிஸாரின் அத்துமீறலை அங்கு நின்றவர்கள் அலைபேசியில் வீடியோ எடுத்துள்ளனர். இதனையடுத்து அலைபேசியைப் பறித்துவைத்த பொலிஸார், "கஞ்சாவை உங்கள் உடைமைக்குள் வைத்து வழக்குப் போட்டு சிறைக்குள் தள்ளுவோம்" என்று மிரட்டியுள்ளனர். எனினும், அங்கு திரண்ட மக்கள் அலைபேசியை ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பரித்தனர். கடும் வாக்குவாதத்தில் இரு தரப்பினரும் ஈடுபட்டனர். இறுதியில் அலைபேசியிலுள்ள வீடியோ வெளியே போகக்கூடாது என்று அச்சுறுத்திவிட்டு அதனை உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

இந்தநிலையில், நேற்றுக் காலை அதே வட்டுக்கு துப்பாக்கிகள், கொட்டன்களுடன் அதிரடிப்படையினரையும் அழைத்துக்கொண்டு பொலிஸார் சென்றுள்ளனர். அந்த வீட்டிலும், அயல் வீடுகளிலும் நின்ற பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைவர் மீதும் மிருகத்தனமாக அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பெண் ஒருவரைக் காலால் மிதித்து அவர் மயங்கி விழும் வரை அடித்துள்ளனர். இந்நிலையில் அவசர நோயாளர் காவு வாகனத்தை அங்கு அழைத்த அப்பகுதி மக்கள் படுகாயமடைந்த 3 பேரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த மேலும் பலர் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் ஆகியோரின் அச்சுறுத்தல் காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லப் பின்னடித்துள்ளனர். அவர்கள் தமது வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்துள்ளனர். (எ,22,173,159)

# இராணுவ வாகனங்கள்....



இராணுவ வாகனங்களைப் பயன்படுத்தியே விடுமுறையில் சென்ற முப்படையினரை நாடு முழுவதிலிருந்தும் அழைத்து வந்தோம். அது போதாமையால்தான் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளை யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தினோம். இவ்வாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

விடுமுறையில் சென்ற முப்படையினரை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வருவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 16 பேருந்துகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. முப்படையினரை ஏற்றி வந்த 31 சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தற்போது வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனங்கள் இருக்கத்தக்கதாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் இராணுவத் தளபதியிடம்கேட்டபோது,

இலங்கை முழுவதும் விடுமுறையில் சென்ற முப்படையினரை பாதுகாப்புத் தரப்பினரின் வாகனங்களிலேயே ஏற்றி வந்தோம். அது போதாமையால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இராணுவத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று அந்தப் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர், என்றார். (ஓ,5,22)

# வீதி அபிவிருத்திக்கு தெற்கிலிருந்து 300 பேர்

*திணைக்களங்களின் எதிர்ப்பையும் மீறி மன்னாரில் பணிகள் ஆரம்பம்*

யாழ்ப்பாணம், மே 1

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் வீதி அபிவிருத்திப் பணிக்காக தெற்கிலிருந்து 300 பேர் அழைத்து வரப்பட்ட நிலையில், மாவட்டத்தின் அனைத்து நிர்வாகங்களும் எதிர்த்துள்ளன. எனினும், அதையும் மீறி அவர்கள் பணியில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கிலிருந்து வந்துள்ளவர்கள், குறைந்தது 14 நாள்களேனும் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்று கோரப்பட்டபோதும் அதற்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த பணியாளர்கள் நேற்றுத் தொடக்கம் வீதி திருத்தப் பணியில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-105)

# தனிமைப்படுத்தும் இடங்களாக நட்சத்திர விடுதிகளை எடுங்கள்

## முன்னாள் எம்.பி. அரசுக்குப் பரிந்துரை

வவுனியா, மே 1

நாட்டில் அமைந்துள்ள நட்சத்திரவிடுதிகளின் அறைகளே தனிமைப்படுத்தும் செயற்பாட் டுக்குரிய இடங்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன் தெரி வித்தார்.

வவுனியாவில் உள்ள அவருடைய அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டம் தோறும் கொரோனோ மருத்துவமனை ஒன்றை அமைக்குமாறு அரசு அவசரமாக அறிவித்துள்ளது. அந்த அறிவித்தல்கள் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. இன்று அந்தப் பணி மனைகளை எப்படி உருவாக்குவது, எப்படிச் செய்வது என்று எண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களும் அதனை செயற்படுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றனவா என்பதும் கேள்விக்குறியே. அதனைச் செயற்படுத்தினால் நல்லது.

அந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்குக்கூட தற்போது இடமில்லை. உயிர் போய்க்கொண்டிருக்கும் நேரத்தில் அரசு வெறுமனே பந்துகளை மாத்திரம் எறிந்துகொண்டிருக்கின்றது. சுகாதாரத் துறையினருக்கான பாதுகாப்பு உபகரணங்கள் இங்கு உள்ளனவா?. பாதுகாப்புக் கவசங்கள், உடைகள், முகக் கவசங்கள், உள்ளனவா என்பன தொடர்பாக அவதானிக்கவேண்டும்.

கொரோனாவுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான மாற்றுநடவடிக்கைகளுக்கும் ஒரே தெரிவாக நட்சத்திர விடுதிகளை பார்க்கமுடியும். அங்கு அறைக்கு அறை தனியான குளியலறைகள் உள்ளன. ஏனைய வசதிகளும் இருக்கின்றன. தற்போது நட்சத்திர விடுதிகள் அனைத்தும் பாவனையற்றே இருக்கின்றன. எனவே குறித்த நிறுவனங்களுக்கு அரசு கொடுப்பனவுகளை வழங்கி அந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கமுடியும்- என்றார். (த-110)

# பொலிஸாருக்கும் பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, மே 1

இடர் வலயங்களில் கடமைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளை பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸாருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்திலேயே இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டில் கடந்த புதன் கிழமை கொரோனா தொற்று உறுதியான 30 பேரில் 22 பேர் கடற்படையினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார். தொற்றுறுதியானவர்களில் 7 பேர் கடற்படையினரின் உறவினர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப)

# எரிபொருள் பாவனை 50 வீதத்தால் குறைவு

*ஊரடங்கு உத்தரவே காரணம்*

கொழும்பு, மே 1

நாட்டில் எரிபொருள் பாவனை நூற்றுக்கு 50 வீதம் குறைவடைந்துள்ளது என்று பெற்றோலிய மொத்தக் களஞ்சிய பிரிவின் தலைவர் எம்.வி மொஹமட் தெரிவித்தார்.

கொரோனா தாக்கம் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று பரவலாக பேசப்பட்டது. ஆனால் அவ்வாறான நிலைமை இப்போது இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவால், பெற்றோலிய மொத்தக் களஞ்சிய தொகுதியிலுள்ள 11 பிரிவுகளிலும் எரிபொருள் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவால், வாகனங்களின் போக்குவரத்து, பயன்பாடு கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்று பெற்றோலிய மொத்தக் களஞ்சிய பிரிவின் தலைவர் எம்.வி மொஹமட் தெரிவித்துள்ளார். (ப)

# பெறுபேறு வந்த பின்னர் சிறுவனை காணவில்லை

கிளிநொச்சி, மே 1

கடந்த நான்கு நாள்களாக சிறுவன் ஒருவனைக் காணவில்லை என்று பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடியைச் சேர்ந்த இரவீந்திரன் அனோஜ் (வயது 17) என்பவரே காணாமல் போயுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் வெளியாகிய சாதாரண தரப் பரீட்சையில் அவர் சித்தியடையவில்லை என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவன் அவருடைய அம்மம்மாவின் பாதுகாப்பில் இருந்துவந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

# ஊரடங்கை நீடிக்கும் தீர்மானம் ஏதுமில்லை

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, மே 1

எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி வரையில் ஊரடங்குச் சட்டத்தை நீடிக்கும் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்று மூத்த பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனை வழிகாட்டல்களுக்கு அமையவே ஊரடங்குச் சட்ட நீடிப்பு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவை வழங்கும் தரப்பினருக்கு நேற்று வரையில் வழங்கப்பட்டிருந்த ஊரடங்கு அனுமதிப்பத்திரம் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் மே மாதம் 31 ஆம் திகதி வரையில் நீடிக்கும் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அதற்கு பதில் அளித்த பொலிஸ்மா அதிபர் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திர கால வரையறை நீடிப்பானது ஊரடங்குச் சட்டத்தை நீடிப்பதாக அர்த்தப்படாது என்று தெரிவித்தார். (ஐ)

# பங்களாவையும், களஞ்சியத்தையும் கோரும் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 1

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் 'சேக்கிற் பங்களா' மற்றும் உலக உணவுத் திட்ட களஞ்சியம் என்பனவற்றை பொலிஸாரின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு பொலிஸார் மாவட்டச் செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு தினமும் அதிக மக்கள் பணி நிமித்தம் வருகின்றனர். அவர்களிலிருந்து பொலிஸாருக்கு அல்லது பொலிஸாரிலிருந்து மக்களுக்கு கொரோனா தொற்று ஏற்படாதவாறு முன்ஆயத்த நடவடிக்கையாக அதிக இடைவெளியை பேணும் வகையில் இந்தக் கட்டடங்களைப் பொலிஸார் கோரியுள்ளனர். இதற்கமைய மாவட்டச் செயலகத்துக்கு அண்மையிலுள்ள 'சேக்கிற் பங்களா' மற்றும் 155 ஆம் கட்டைக்கு அண்மையிலுள்ள உலக உணவுத் திட்டத்தின் களஞ்சியமும் தற்போது பாவனையின்றி மாவட்டச் செயலகத்தின் பொறுப்பில் உள்ளன. அவற்றைப் பொலிஸார் கோரியுள்ளனர். (த-105)

# இடைத்தங்கல், தனிமைப்படுத்தல் மையங்கள் மன்னாரில் அமையாது

மன்னார், மே 1

மன்னார் மாவட்டத்தில் மக்கள் வாழும் பகுதிகளில் இடைத்தங்கல் முகாம் அல்லது கொரோனா தனிமைப்படுத்தும் நிலையங்களை அமைப்பதில்லை என்று முப்படையினரும் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்ளுவது தொடர்பான அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டத்தில் எங்கு என்ன நடந்தாலும் பொதுமக்கள் என்னிடமே கேள்விகளைக் கேட்கின்றார்கள். இவ்வாறான நிலையங்களை அமைக்க ஏன் அனுமதி வழங்கினீர்கள் என்று கேட்கின்றனர். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெற்று சில நிலையங்கள் இயங்குகின்றன. இனிவரும் காலங்களில் அது தொடர்பில் எமக்கு அறியத்தருமாறு கோரியுள்ளோம். அதற்கு முப்படையினரும் சம்மதம் என்று செயலர் தெரிவித்தார்.

**600 ஏக்கர் பகிர்ந்தளிக்கப்படும்**

இதேவேளை, மன்னார் மாவட்டச் செயலகத்தில் கட்டுக்கரை குளத்துக்கான சிறுபோக செய்கை பற்றிய கூட்டத்தின் இறுதியில், 600 ஏக்கர் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. ஏனைய 400 ஏக்கர் உப தானிய செய்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த 600 ஏக்கரையும் வாய்க்கால் அமைப்புகளுக்கு வழங்காமல் நேரடியாக குறைந்த நிலங்களை கொண்டு விவசாயம் செய்கின்ற மக்களுக்கு1200 துண்டுகளாகப் பிரித்து வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஏழு நாள்களுக்குள் அதற்கான பட்டியல் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அந்த 1200 பேரையும் சரியாக அடையாளம் கண்டு அவர்கள் நேரடியாக பயிர்ச் செய்கைசெய்ய அனுமதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. எந்தக் காரணம் கொண்டும் பிரிக்கப்பட்ட துண்டுகளை யாருக்கும் விற்பனை செய்யவோ அல்லது வேறு எந்த முறையிலும் பயன்படுத்தவோ வழங்கவோ முடியாது.

உரியவர்கள் நேரடியாக விதைத்து பலன் பெற வேண்டும். இதற்கு மேலதிகமாக 20 ஏக்கர் நிலம் விதை உற்பத்தித் திணைக்களத்துக்கு பயிர்ச் செய்கை செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நீர் விநியோகத்தை வழங்குமாறு நீர்ப்பாசனப் பணிப்பாளரிடம் பணிக்கப்பட்டுள்ளது. மானிய அடிப்படையில் இரு தரப்பினருக்கும் உரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10 ஆம் திகதி நீர் திறப்பு மற்றும் நீர் விநியோக திகதிகளும் தீர்மானிக்கப்பட்டுகுளம் பயிர்ச் செய்கைக்காக திறந்து விடப்படும். வாய்க்கால் அமைப்புகளுக்கு நேரடியாக கொடுக்காமல் 1200 விவசாயிகளுக்கு கொடுக்க தீர்மானித்ததன் நோக்கம் அரசின் விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் எல்லா மக்களும் பயன்பெற வேண்டும். என்று தெரிவித்தார். (த-56)

## உள்நாட்டு பால்மாக்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 1

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஐலண்ட், நெஸ்ட்லே மற்றும் பெலவத்த போன்ற பால் மா வகைகளின் விலைகளே உயர்ந்துள்ளன. ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 945 ரூபாவாகவும், 400 கிராமின் விலை 380 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## 9 வயது மகளை அலுமினிய கம்பியால் தாக்கிய தந்தை

மட்டக்களப்பு, மே 1

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனது 9 வயது மகளை அலுமினிய கம்பியால் தாக்கி காயப்படுத்திய தந்தையை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எச்.எம்.முஹமட் பஸீல் உத்தரவிட்டுள்ளார்.

சகோதரர்கள் இருவர் சண்டையிட்ட போது தந்தை தனது ஒன்பது வயது மகளை மாத்திரம் அலுமினியக் கம்பியால் தாக்கியதில் அவர் தலையில் படுகாயமடைந்தது. இதனால் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை ஊரடங்கு காலத்தில் சிறுவர்கள் மீதான வன்முறை அதிகரித்து வருவதாகத் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. (ஓ,5)

## தொற்று நீக்கியை விசிற உருவாக்கப்பட்டது கருவி

கொழும்பு, மே 1

இலங்கையில் மனிதாபிமான மீட்புக்குழுவாக கருதப்படும் "ஐ கெயார்" நிறுவனத்தினால் வைரஸ் தொற்றுக்களை அழிக்கும் இரசாயனத் திரவங்களை விசுறும் கருவியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதிக நபர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் தொற்று நீக்கும் நடவடிக்கை ஒரேயொரு நபரால் இந்த இயந்திரத்தின் வாயிலாக மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய வீதிகளைக் கொண்ட பகுதிகளுக்கு பெரிய தொற்று நீக்கும் இயந்திரங்களைக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றமை தொற்று நீக்கும் நடவடிக்கையில் சிக்கலை தோற்றுவித்துள்ளது.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த இயந்திரம் சிறிய வீதிகளிலும் சென்று தொற்று நீக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவான வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் இயக்கம் தொடர்பில் காணொலியும் வெளியிடப்பட்டுள்ளது. (ப)

## கசிப்பை ஒழிப்பது இளையோர் கையில்

### சாவ. பிரதேச சபைத் தவிசாளர் அழைப்பு

சாவகச்சேரி, மே 1

தென்மராட்சியில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிப்பதற்கு தென்மராட்சி இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக ஊரடங்கு நடைமுறையில் உள்ள நிலையில் தென்மராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியானது பெருமளவில் இடம்பெறுகின்றது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மதுபானசாலைகளும் பூட்டப்பட்டு இருப்பதன் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் அதாவது மட்டுவில், கெருடாவில் மறவன்புலவு, சரசாலை போன்ற கிராமங்களில் மறைவான பற்றைகளுக்குள்ளும் ஆள்கள் இல்லாத வீடுகளிலும் கசிப்பு உற்பத்தி பெருமளவில் இடம்பெற்று வருகின்றது. இவை தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும் இது தொடர்பில் நாம் பொலிஸாருக்கு அறிவித்து, பொலிஸாரால் பெருமளவு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டு அதனோடு சம்பந்தப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் அது இன்றுவரை முற்றாக நிறுத்தப்படவில்லை. தென்மராட்சி இளைஞர்கள், பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதன் மூலமே கசிப்பு உற்பத்தியை தென்மராட்சியில் முற்றாக ஒழிக்க முடியும். எமது பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின்போது கசிப்பு உற்பத்தியை நிறுத்தக் கோரி ஒரு பிரதேச சபை உறுப்பினரால் விசேட பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். என்றார். (ப-9)

## சமுர்த்திக் கொடுப்பனவு பெறுவோர் அதிகரிப்பு!

### எழுத்தறிவு வீழ்ச்சி

கொழும்பு, மே 1

சமுர்த்திக் கொடுப்பனவு பெறுபவர்களின் எண்ணிக்கை 18 லட்சமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018 இல் 14 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுவந்த நிலையில், புதிதாக 4 லட்சம் பேர் இணைத்துக் கொள்ளப்பட்டு தற்போது 18 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி கொடுப்பனவாக 2018 இல் 39.2 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. 2019 இல் 44.7 பில்லியன் ரூபா பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் எழுத்தறிவு சிறு அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 இல் 92.6 வீதமாக இருந்த எழுத்தறிவு வீதம் 2018 இல் 92.5 ஆக இருக்கின்றது. 2017 இலும் ஒப்பிடுகையில் சிறியளவு வீழ்ச்சி (0.1) ஏற்பட்டுள்ளதை காணமுடிகின்றது. அத்துடன், ஆண்களின் எழுத்தறிவு வீதம் 93.4 ஆகவும், பெண்களின் எழுத்தறிவு வீதம் 91.6 ஆகவும் உள்ளது. (ஓ,5,44)

# மழை ஆரம்பித்தால் டெங்கு பெருகலாம்!

## முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் ஆலோசனை

கொழும்பு, மே 1

நாட்டில் எதிர்வரும் வாரங்களில் மழையுடனான காலநிலை நிலவும் என்பதால் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படும் எனத் தெரிவித்துள்ள சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கடந்த வருடத்தை போன்றல்லாமல் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காக முன்னாயத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவினருடன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



எதிர்வரும் வாரங்களில் மழையுடனான காலநிலை நிலவும் என்பதால் டெங்கு நுளம்புகள் பெருக வாய்ப்புக்கள் உள்ளன. அதற்கமைய டெங்கு நுளம்பு பெருக ஆரம்பித்தால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பதால் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான முன்னாயத்தங்கள் செய்யப்பட வேண்டும். கடந்த வருடத்தில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிக மக்கள் டெங்கு நோய்க்கு உள்ளாகியிருந்தனர். இந்த வருடம் அவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கான முன்னாய்த்தங்கள் செய்யப்பட வேண்டும். தற்காலிக கட்டடங்கள் உள்ளிட்டவை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.என்றார். (ப)

## வெசாக் வாரம் பிரகடனம்

கொழும்பு, மே 1

மே மாதம் 4 ஆம் திகதி முதல் எட்டாம் திகதி வரை தேசிய வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று புத்த சாசன அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், மே 1

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நுணாவில், கைதடி, மட்டுவில் வாகையடி, நாவற்குழி, கோகிலாக் கண்டி, தச்சன்தோப்பு, மறவன் புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கிளிகடை, ஆடியபாதம் வீதி நல்லூர், இராமலிங்கம் ஆடியபாதம் சந்தி, கோவில் வீதி சங்கிலியன் வீதி சந்தி, நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு பிரதேசம், நாவலர் வீதி (கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டி வீதி வரை), பாரதி வீதி, புறூடி வீதி, நொத்தாரிஸ் லேன், நல்லூர் குறுக்கு வீதி, கண்டி வீதியில் கச்சேரியிலிருந்து கண்டி வீதி செம்மணிவரை, இலந்தைக் குளம், புங்கன் குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்குப் பிரதேசம், செல்லர் வீதி, ராணி வீதி, மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, தொக்யாட், முல்லி, பனை அபிவிருத்திச் சபை, சங்கன் கட்டடத் தனியார் நிறுவனம், சித்த ஆயுள்வேத பல்கலைக் கழகம், நாராயணா சீமெந்து உற்பத்தி தொழிற்சாலை, யுனைற்றட் மோட்டோர்ஸ் லங்கா பல் தேசியக் கம்பனி, யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# மங்களவின் கடிதத்தில் பிழையான அர்த்தங்கள்

## ஜனாதிபதி பதில் கடிதம்

கொழும்பு, மே 1

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கடந்த 28ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸவுக்கு அனுப்பியிருந்த கடிதத்துக்கு கோத்தாபய ராஜபக்ச தனது செயலாளரின் மூலம் நேற்று பதில்கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் மங்கள சமரவீரவின் கடிதம் பல்வேறு பிழையான தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'உருவாகியுள்ள பிரச்சினையை அரசியலமைப்புக்கு அமைவாக தீர்ப்பதற்கும் அரச செலவுகளை அனுமதிப்பதற்காகவும் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கான கோரிக்கை' என தலைப்பிட்டு, சமரவீர ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்துக்கான பதிலை ஜனாதிபதி தனது செயலர் பி.பீ ஜயசுந்தரவின் மூலம் மங்கள சமரவீரவுக்கு அனுப்பியுள்ளார்.ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கு அந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், நாடாளுமன்றம் கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்காவிட்டால் அரசமைப்பின் 150(3) பிரிவின் கீழ் இடைக்கால கணக்கின் மூலம் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்டு 3 மாத காலத்துக்கான செலவுகளுக்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. புதிய தாராளவாத சமூக பொருளாதார தத்துவத்தை தனது கொள்கையாக கொண்ட முன்னாள் நிதியமைச்சர் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்வதற்கு முன்னுரிமையளிக்காதிருப்பது ஏன் என ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ளார். என்றுள்ளது. (ப)

# நாடு திரும்ப விரும்பினால் தூதரகங்களில் பதியலாம்!

கொழும்பு, மே 1

லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் மீண்டும் நாடு திரும்ப விரும்பினால் அந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பதிவு செய்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உலகளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாடுகளிலுள்ள மாணவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரும் பணியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

அதன் ஒரு அங்கமாகவே லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் நாடு திரும்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைகள் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கைக் கடவுச்சீட்டை வைத்திருக்கும் லண்டன் மற்றும் ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மாணவர்களில் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப விரும்புபவர்கள் அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் விரைவாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்- என்றுள்ளது. (ஐ)



## கொரோனா விழிப்புணர்வு பிரசுரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 1

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் 10 ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனைக்கு சிவன் அறக்கட்டளை அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன், சமூக இடைவெளியை பின்பற்றுவது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் துண்டுப் பிரசுரங்களே யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிப்பாளரிடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டன. (ஐ)

## மன். விவசாயிகளிடமிருந்து 19 ஆயிரம் கிலோ கச்சான் விதைகளை பெறத் திட்டம்

மன்னார், மே 1

மன்னார் மாவட்ட விவசாயிகளிடமிருந்து 19 ஆயிரம் கிலோ நிலக் கடலை விதைகளைப் பெறுவதற்கு மாவட்ட விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது என்று மன்னார் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கே.எம் .ஏ.சுகூர் தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் உப தானியப் பயிர்ச் செய்கைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். அது தொடர்பாகக் கேட்டபோதே மன்னார் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் உப தானியப் பயிர்களில் நிலக்கடலை விதைக்கு மட்டுமே தட்டுப்பாடு நிலவுகிறது. எமது திணைக்களத்தில் அவை இல்லை. ஆனால் மன்னார் மாவட்ட விவசாயிகளிடம் போதிய அளவு நிலக்கடலை விதைகள் உள்ளன. அவர்களிடம் இருந்து 19 ஆயிரம் கிலோ நிலக்கடலை விதைகளை எடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அவை முளைத்திறன் சோதனையில் உள்ளன. உறங்கு நிலைக் காலம் முடிவடைந்தவுடன் அவற்றைப் பெற்று விவசாயிகளுக்கு கொடுக்கவுள்ளோம். பயறு 2 ஆயிரத்து 800 கிலோ, கௌப்பி 500 கிலோ என்பவற்றுடன் ஒன்பது வகையான உபதானிய விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளன - என்றார். (ப-213)

## காரைநகர்...

இவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் அழைத்து வரப்பட்டு, கடற்படையினரின் முழுமையான கண்காணிப்பில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அழைத்து வரப்பட்ட 80 பேரையும் கவனிப்பதற்கு 9 பேர் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தனித் தனியான மலசலகூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

## நீர்வேலியில்.....

நள்ளிரவு நடந்துள்ளது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மூன்று வீடுகளில் கொள்ளை நடந்துள்ளது. சைக்கிள்களில் முகமூடி அணிந்தவாறு வாள்களுடன் வந்த நால்வர் கொண்ட கும்பலே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவத்தின்போது வீட்டின் உரிமையாளர்கள் சிலர் தாக்கப்பட்டுள்ளனர். வீடுகளில் இருந்த தங்க நகைகள் மற்றும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ111)



# மா ஏற்றிச் செல்லும் சாரதிகளுக்கு சோதனை

மூதூர், மே 1

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாட்டின் சகல பாகங்களுக்கும் திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து மா ஏற்றிச் செல்லும் சாரதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான மருத்துவ அறிக்கைகள் தினமும் வழங்கப்படுகின்றன. பாதுகாப்பு நடைமுறைகளுடன் சுகாதார பரிசோதர்கள், பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.(க-40)

# பொலிஸாரின் விடுமுறை ரத்து நீடிப்பு

கொழும்பு, மே 1

பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறை ரத்து காலம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறை ரத்து ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நிலைமைகள் சீரின்மையால், எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


# கொரோனாவுடன் சிப்பாய் உலாவிய இடங்கள் அறிவிப்பு

## அவதானத்துடன் செயற்படுமாறு வவு. சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்

வவுனியா, மே 1

கொரோனா தொற்றுக்குள்ளான வவுனியாவைச் சேர்ந்த கடற்படை சிப்பாய் சென்ற இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்று வவுனியா சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

வெலிசறை கடற்படைமுகாமில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த கடற்படை சிப்பாய் ஒருவருக்கு கொரோனோ தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் கடற்படைச் சிப்பாய் கொரோனா தொற்றுப் பரிசோதனை செய்வதற்கு முன்னர் வவுனியாவில் பல இடங்களுக்குச் சென்றுள்ளார். அவர் சென்ற இடங்கள் தொடர்பான தகவல்கள் மக்கள் நலன் கருதி வெளியிடப்பட்டுள்ளன.



கடற்படைச் சிப்பாய் வீரர் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஏகேஎஸ் சேவீஸ் நிலையம் மற்றும் சிறி பலசரக்கு வாணிபம், கந்தசாமி கோவில் வீதியில் அமைந்துள்ள செல்வா, கொண்டா இரு வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம், கந்தசாமி வீதியிலுள்ள எஸ்.ஜே. பலசரக்கு வாணிபம், சூசைப்பிள்ளையார் குளம் சந்திரன் வாகனம் திருத்தும் இடம் , வவுனியா மருத்துவமனை வீதியில் உள்ள விஜயா வாணிபம், பழைய பேருந்து நிலைய கட்டடத்திலுள்ள அபிலாஷ் பார்மசி, பஜார் வீதியிலுள்ள ஆடை விற்பனையகமான சரவணாஸ் போன்றவற்றிக்கு கடந்த 22ஆம் திகதி சென்றுள்ளார். மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அண்மையிலுள்ள எம்.பி.சி.எஸ். எரிபொருள் மீள் நிரப்பு நிலையம், இரண்டாம் குறுக்குத் தெரு வீதியிலுள்ள செலிங்கோ காப்புறுதி நிலையம், வவுனியா மருத்துவமனை வீதியிலுள்ள மகாஜனா கட்டட உதிரிப்பாக நிலையம் போன்ற இடங்களுக்கு மறுநாள் 23ஆம் திகதி சென்றுள்ளார் என்றும் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ-110)



# இடியுடன் மழை பெய்யக் கூடும்

கொழும்பு, மே 1

மத்திய, தென், ஊவா, கிழக்கு, சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன், நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க)

# தமிழீழ போராளிகளை கொச்சைப்படுத்தாதீர்

## எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்தியாவிலே திரைப்படத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தை சிறப்பான முறையில் எடுத்துவருகின்றனர். அதேநேரம் சிலர் வேண்டுமென்றே கொச்சைப்படுத்தும் வகையிலும் கேலி செய்யும் வகையிலும் திரைப்படங்களை எடுக்கின்றனர்.

அண்மையில் துல்கார் சல்மான் என்ற ஒரு நடிகரின் படத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட எமது தலைவர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் காட்சி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தில் இத்தகைய காட்சிகள் என்பது தமிழின உணர்வாளர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அதே போன்று தமிழ் மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. இதற்கு தமிழ் நாட்டில் பலரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்றே ஈழத்தில் இருந்தும் எங்களது கண்டனங்களை நாங்கள் வெளியிடுகின்றோம். அது மாத்திரமல்லாமல் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் கோருகின்றோம். தமிழீழ தேசத்துக்கான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நீங்கள் கொச்சைப்படுத்த முற்படுவது போன்று இந்திய தேசத்தின் விடுதலைக்காக போராடியவர்களை யாராவது கொச்சைப்படுத்தினால் உங்கள் மனநிலை எவ்வாறு இருக்கும்?.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கொச்சைப்படுத்துவதை ஈழத் தமிழர்களாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதுடன் இது போன்ற செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ப-20)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 01.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.